| அசல் வழக்கு எண்.108/2021 | | பி.சா .1 | தேதி.15.02.2023 |
|---|---|---|---|
| பெயர் | திருமதி. கலைச்செல்வி | வயது | 54 |
| க/பெ. | திரு.காளிதாசன் | முகவரி | காரமடை ரோடு |
| வட்டம் | மேட்டுப்பாளையம் | மாவட்டம் | கோயமுத்தூர் |

சாட்சி முன்னிலை உறுதிமொழி எடுக்கப்பட்டது

குறுக்கு விசாரணை

1. நான் இந்த பள்ளியில் கடந்த மூன்று ஆண்டுகளாக தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்து வருகிறேன். அரசு மேல்நிலைப்பள்ளி இயங்கும் இடம் அரசுக்கு சொந்தமான இடம் என்றால் சரிதான். பள்ளியின் மொத்த பரப்பளவு 7.92 ஏக்கர். அந்த நிலம் அரசுக்கு தனியாரால் தானமாக கொடுக்கப்பட்டது. எந்த வருடம் கொடுக்கப்பட்டது என்பது எனக்கு தெரியாது. அது ஒரு பத்திரமாக கொடுக்கப்பட்டதா அல்லது பல பத்திரங்களாக கொடுக்கப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது . அந்த ஆவணங்களை நான் படித்துப் பார்க்கவில்லை. 7.92 ஏக்கர் நிலம் பள்ளிக்கு பாத்தியப்பட்டது என்பதை காண்பிக்க ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அனுபவச் சான்றிதழ் உள்ளது. அது முதன்மை கல்வி அலுவலகத்தில் உள்ளது. எத்தனை ஆண்டுகளாக உள்ளது என்பது எனக்கு தெரியாது.

2. அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான். அதன் ஒளிநகல் என்னிடம் உள்ளது. அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அது தற்போது என்னிடம் உள்ளது. தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். பள்ளிக்கு சுற்றுச்சுவர் உள்ளதா என்றால் மற்ற இடங்களில் உள்ளது. வழக்கு போடப்பட்டுள்ளதால் வழக்கு இடத்திற்கு அருகில் சுற்றுச்சுவர் இல்லை. சுற்றுச்சுவர் 150 அடி நீளத்திற்கு இல்லை. அவ்வாறு சுற்றுச்சுவர் இல்லாமல் உள்ளது பள்ளியின் எந்த திசையில் உள்ளதென்றால் வடக்கு, வடகிழக்கு மற்றும் தெற்கு பகுதியில் உள்ளது. சுற்றுச்சுவர் இல்லாத வடபுறத்திற்கு வடக்கே என்ன உள்ளது என்றால் ஆக்கிரமிப்பு உள்ளது. யார் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்றால் லட்சுமி என்பவர் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்.

3. 150 அடி நீளமும் ஆக்கிரமிப்பு செய்யப்படவில்லை. கொஞ்ச இடம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. அது எவ்வளவு என்றால் 47 ச.மீட்டர். 47 ச-மீட்டரில் என்ன

கட்டியுள்ளார்கள் என்றால் கட்டிடங்கள் கட்டியுள்ளார்கள். இந்த கட்டிட சுவருக்கும், பள்ளி கழிவறைக்கும் இடையில் வெற்றிடம் உள்ளது என்றால் சரிதான். அதன் அகலம் 20 அடி இருக்கும் என்றால் சரிதான். அந்த 20 அடி அகலம் எவ்வளவு நீளத்திற்கு கிழமேலாக உள்ளது என்றால் அளந்து பார்த்தால்தான் தெரியும், சுமார் 70 மீட்டர் இருக்கலாம். அந்த இடம் அரசுப்பள்ளிக்கு சொந்தமான இடம் என சொல்கிறேனா என்றால் ஆமாம். அந்த இடம் அரசுப்பள்ளிக்கு சொந்தமானது என்பதை காண்பிக்க எந்த ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் எனக்காகவும், மற்ற பிரதிவாதிகளுக்காவும் சாட்சி சொல்கிறேன். மேற்கண்ட காலியிடம் பள்ளிக்கு சொந்தமானது என்பதை காண்பிக்க வருவாய் அலுவலர்களிடம் ஆவணங்கள் எதையும் வாங்கி நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்..

4. மேற்கண்ட காலியிடம் அரசு புறம்போக்கு நீர்வழிப்பாதை என்பதும், பள்ளியின் வடபுற எல்லை புறம்போக்கிற்கு தென்புறம் அமைந்துள்ளது என்பதும், தெரிந்துவிடும் என்பதால்தான் அதற்குரிய ஆவணங்களையும், பள்ளிக்குரிய தான பத்திரங்கள் உள்ளிட்ட ஆவணங்களையும் தாக்கல் செய்யாமல் தவிர்த்திருக்கிறேன் என்றால் சரியல்ல. மகாத்மா காந்தி ஊரக வளர்ச்சி திட்டத்தில் சுற்றுச்சுவர் கட்ட கொடுக்கப்பட்ட அனுமதி கடிதத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சுற்றுச்சுவர் கட்டுவதற்கான வரைபடம் தயாரிக்கப்பட்டுள்ளதா என்றால் BDO அலுவலகத்தில் தயாரிக்கப்பட்டது, அந்த வரைபடத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

5. எத்தனை அடி நீளத்திற்கு சுற்றுச்சுவர் கட்ட அனுமதி வேண்டப்பட்டது என்றால் 150 மீட்டர் ஆகும், அதற்கான ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நாங்கள் அனுமதி கேட்ட இடம் பள்ளிக்கு சேர்ந்ததில்லை என்றும், புறம்போக்கு நிலம் என்றும் மாவட்ட ஆட்சியரிடம் அனுமதி கேட்டோமா என்றால் அது பள்ளிக்கு சேர்ந்த இடம்தான் என்பதால் மாவட்ட ஆட்சியரிடம் அனுமதி கேட்கப்படவில்லை. வாதிகள் சுற்றுச்சுவர் கட்ட அனுமதி மறுப்பதாகவும், அந்த இடம் புறம்போக்கு நிலமென உரைப்பதாகவும், எனது உயர் அலுவலர்களிடம் விபரம் சொன்னேனா என்றால் எழுத்து மூலமான கொடுத்துள்ளேன். அதன் அடிப்படையில் அவர்கள் அளந்து பார்த்து உறுதி செய்தார்களா என்றால் வட்டாட்சியர் அளந்து பார்த்து பள்ளிக்கு சொந்தமான இடம் என்று உறுதி செய்தார்கள்.

6. அவ்வாறு உறுதி செய்த அறிக்கை மற்றும் வரைபடத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதற்கான நிதி ஒதுக்கீடு ரத்து செய்ப்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் ரத்தாகவில்லை . ரத்தாகிவிடும் என சொல்லியுள்ளார்கள். புல வரைபடத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த காலியிடம் அரசு புறம்போக்கு நிலம் என்பதால் தான் வரைபடம் தாக்கல் செய்யவோ, சுற்றுச்சுவர்

கட்டுவதற்கான அனுமதி உத்தரவை தாக்கல் செய்யவோ இல்லை என்றால் சரியல்ல. அந்த காலியிடத்தில் கட்டியுள்ள செப்டிக் டேங்கின் நீள , அகலம் எவ்வளவு என்றால் குறிப்பிட்டு எனக்கு தெரியாது. சுமாராக 10 அடி இருக்கலாம்.

7. கழிவறைத் தொட்டிக்கு தென்புறம் தான் பள்ளியின் கழிவறை அமைந்துள்ளது என்றால் சரிதான். அந்த கழிவறைக்கு தொட்டியை நாங்கள் அரசு புறம்போக்கு நிலத்தில் கட்டியுள்ளோம் என்றால் சரியல்ல. அரசு புறம்போக்கு நிலத்தில் சுவர் கட்ட எவ்வித அதிகாரமும் , உரிமையும் இல்லை என்றால் அந்த இடம் அரசு புறம்போக்கு நிலமில்லை. அரசு புறம்போக்கு நீர்வழிப்பாதை என்பதால் ஆக்கிரமிப்பு செய்ய உரிமையில்லை என்பதால் அது அரசு புறம்போக்கு நீர்வழிப்பாதை இல்லை. நான் வாதிகளின் அனுபவத்தை தொல்லை செய்வதாக வழக்கறிவிப்பு அனுப்பினார்களா என்றால் சரிதான். எனக்கு எத்தனை அறிவிப்பு வந்தது என்றால் இரண்டு அறிவிப்பு வந்தது . அந்த அறிவிப்புகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கிற்கு ஏற்பட்ட வழக்குமூலம் புதிதானது என்றும், ஏற்கனவே வழங்கப்பட்ட தீர்ப்பை எவ்வகையிலும் பாதிக்காது என்றும், சொன்னால் சரியல்ல.

8. பி.சா.ஆ.1 ,2 ஆவணங்கள் நான் அனுப்பியது கிடையாது என்றால் சரிதான். அந்த அறிவிப்புகளுக்கும், எனக்கும் சம்மந்தமில்லை என்றால் சரிதான். தமிழ்நாடு நில ஆக்கிரமிப்பு சட்டம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. எனக்கு எதுவும் தெரியாமல் முதல் விசாரணை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 47 ச.மீட்டர் வாதிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக சொல்லக்கூடிய இடத்திற்கு பட்டா வழங்கவேண்டி வாதிகள் மாவட்ட ஆட்சியரிடம் மனுதாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. 47 ச-மீட்டர் போக மீதி இடத்தில் அவர்களது பட்டா நிலத்தில் அவர்கள் வீடு கட்டியுள்ளார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. புறம்போக்கு நிலத்திற்கு பட்டா தருவதற்கு பயந்துதான் வருவாய் அலுவலர்கள் சாட்சியம் அளிக்கவராமல் என்னை மட்டும் அனுப்பியுள்ளர்கள் என்றால் சரியல்ல. அரசு அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து வாதிகளின் அனுபவத்தை நான் தொல்லை செய்து வந்தேன் என்றால் சரியல்ல. வாதிகள் கேட்ட பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

**ஒம்/-பெ.க.சிவக்குமார்**

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.